செய்தி வெளியீடு எண்: 262 நாள்: 23.04.2019

## செய்தி வெளியீடு

**திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த செல்வி கோமதி மாரிமுத்து அவர்கள் கத்தார் நாட்டில் தோஹா நகரில் நடைபெற்று வரும் ஆசிய தடகள போட்டியில், பெண்களுக்கான 800 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் தங்க பதக்கம் வென்றதையொட்டி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (23.4.2019) செல்வி கோமதி மாரிமுத்து அவர்களுக்கு அனுப்பிய வாழ்த்து கடிதத்தின் விபரம்:**

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த தாங்கள் தற்பொழுது கத்தார் நாட்டில் தோஹா நகரில் நடைபெற்று வரும் 2019-ஆம் ஆண்டிற்கான ஆசிய தடகள போட்டியில் பெண்களுக்கான 800 மீட்டர் ஓட்டப்பந்தய போட்டியில், தங்கப்பதக்கம் வென்று சாதனை புரிந்துள்ளீர்கள் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன்.

ஆசிய தடகள போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற தங்களுக்கு என் சார்பாகவும், தமிழ்நாட்டு மக்கள் சார்பாகவும் எனது மனமார்ந்த நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

தாங்கள் இதுபோன்று சர்வதேச அளவில் நடைபெறும் விளையாட்டு போட்டிகளில் கலந்து கொண்டு, மேலும் பல வெற்றிகள் பெற்று, இந்தியாவிற்கும் தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்த்திட வேண்டும் எனவும், அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்..”

*******

**வெளியீடு : இயக்குநர், செய்தி - மக்கள் தொடர்புத் துறை, சென்னை –9**
**நாள் : 23.4.2019**